துணை ஆணையாளர் –1 , உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
சேப்பாக்கம், சென்னை–5, அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி.மா.நாகம்மாள்.,

செ.மு.ஆணை எண்.அ4/ 20879 /2023 நாள்:28.12.2023

பொருள்: நியமனம் (நேரடி) – உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – நிர்வாகம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் பணித்தொகுதி–IV – (தேர்வு நடைபெற்ற நாள் 24.07.2022) – இளநிலை உதவியாளர் பட்டியல் பெறப்பட்டது – பணி நியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல்.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண். 1925/PSD-D2/2023, நாள்: 31.08.2023.
2. துணை ஆணையாளர்–1, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சேப்பாக்கம், சென்னை–5அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ4/20879/2023, நாள்: 21.09.2023.

*****

**ஆணை:**

பார்வை–1ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தின் வாயிலாக, முதல் கட்ட கலந்தாய்வு மூலம் இத்துறைக்கு இளநிலை உதவியாளர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களுக்கு, பார்வை–2ல் காணும் செயல்முறை ஆணையில் இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

மேற்சொன்னபடி பணி நியமனம் வழங்கப்பட்ட நபர்களில், இத்துறைப் பணியில் சேர்ந்து இளநிலை உதவியாளர்களாக பணிபுரிந்து வரும் கீழ்காணும் நபர்களுக்கு, இளநிலை உதவியாளர் பதவியில், அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில், சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் பணித்தொகுதி–IV பணி நியமனம் குறித்த நிலுவையிலுள்ள வழக்குகள் மற்றும் ரிட் மனுக்களில் பிரகடனப்படுத்தப்படும் தீர்ப்பு முடிவுகளுக்கு உட்பட்டு நிபந்தனை அடிப்படையில், பணி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

"The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination-IV (Group IV)".

| வ.எண். | இளநிலை உதவியாளர் பெயர் தி/ள் (ம) அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | K.ஜெயராமன்,<br>ஆணையாளர் அலுவலகம், | 27.09.2023 மு.ப | 27.09.2023 மு.ப |
| 2. | B.சேதுராமன்,<br>தாம்பரம் மண்டலம், | 25.09.2023 மு.ப. | 25.09.2023 மு.ப. |
| 3. | K.ஜெயஸ்ரீ,<br>சிதம்பரனார் மண்டலம், | 27.09.2023 மு.ப | 27.09.2023 மு.ப |
| 4. | V.அருள்குமார்,<br>ஆணையாளர் அலுவலகம் | 27.09.2023 மு.ப | 27.09.2023 மு.ப |
| 5. | M.ஷாலினி<br>ஆணையாளர் அலுவலகம் | 26.09.2023 மு.ப. | 26.09.2023 மு.ப. |

| | | | |
|---|---|---|---|
| 6. | M.பிரவின்<br>திருவொற்றியூர் மண்டலம் | 26.09.2023 மு.ப. | 26.09.2023 மு.ப. |
| 7. | K. தினேஷ் ராம் சங்கர்,<br>சைதாப்பேட்டை மண்டலம் | 26.09.2023 மு.ப. | 26.09.2023 மு.ப. |
| 8. | T. ராஜமீனா,<br>பரங்கிமலை மண்டலம் | 27.09.2023 மு.ப | 27.09.2023 மு.ப |
| 9. | A. அருளாந்து,<br>அண்ணாநகர் மண்டலம் | 27.09.2023 மு.ப | 27.09.2023 மு.ப |
| 10. | P. வேல்ச்சாமி,<br>தி.நகர் மண்டலம் | 27.09.2023 மு.ப | 27.09.2023 மு.ப |
| 11. | K. பிரபாகரன்,<br>ஆயிரம்விளக்கு மண்டலம் | 27.09.2023 மு.ப | 27.09.2023 மு.ப |
| 12. | S.D.ஆஃப்ரின் அஃப்சானா,<br>தாம்பரம் மண்டலம் | 27.09.2023 மு.ப | 27.09.2023 மு.ப |
| 13. | G. முத்துவேல்,<br>அம்பத்தூர் மண்டலம் | 27.09.2023 மு.ப | 27.09.2023 மு.ப |
| 14. | R. ஜெனிஷ்,<br>ஆணையாளர் அலுவலகம். | 27.09.2023 மு.ப | 27.09.2023 மு.ப |
| 15. | M. சிவகாமி,<br>அண்ணாநகர் மண்டலம் | 29.09.2023 மு.ப | 29.09.2023 மு.ப |

பணிவரன்முறை செய்யப்படும் தேதியிலிருந்து மூன்றாண்டு கால தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவ காலத்தில் வைத்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மேலும்,வரிசை எண்:14–ல் உள்ள பணியாளரை தவிர இதர பணியாளர்கள் தகுதிகாண் பருவகாலத்திற்குள், அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம், பவானிசாகர் அல்லது இதர பயிற்சி நிலையத்தினால் தெரிவிக்கப்படும் இதர மையங்களில் நடைபெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

துணை ஆணையாளர்–1 1/17

3/1/24

பெறுநர்
சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள்
(உரிய அலுவலர்கள் மூலமாக)

நகல்

1. முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் மேசைக்கு.
2. அனைத்து அலுவலர்கள், ஆணையாளர் அலுவலகம்.
3. துணை ஆணையாளர் (ந) வடக்கு / தெற்கு, சென்னை–05.
4. மாவட்ட வருவாய் அலுவலர் / முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம்– 638 451.
5. சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளர் அலுவலகம்,
(சம்பந்தப்பட்ட பணியாளருக்கு சார்வு செய்து அவ்விவரத்தினை அசலாக அனுப்பிடவும், மேலும் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்டு அவ்விவரத்தினை தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்).
6. கண்காணிப்பாளர், 'ச' பிரிவு, ஆணையாளர் அலுவலகம்.
7. ஆணையாளர் அலுவலக தகவல் பலகைக்கு.
8. 'அ4' இருப்பு கோப்பு